216836

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

மார்ச் ௨7, 1998 தொகுதி-41
எண் 1.

ப

D
V211, 31 N98
N98·41·1
216836

வெளியீடு 24-7-98 Issued 24-7-98

1374 - 98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 27, 1998 – தொகுதி 41 – எண் 1

Friday the 27th March, 1998 – Volume 41 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,

Chennai-600 009

[Price Rs. 3.00

I

V2!!,51'N98

1998 4!!

216856

1374
98

27-3-1998

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xiii-xiv |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. | வரவு-செலவுத் திட்டம், 1998-99, அளித்தல்-- | 1-47 |
| | மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 1-47 |
| 2. | முன்பண மானியக் கோரிக்கைகள், 1998-99, அளித்தல்-- | 47-50 |
| | மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 47-50 |
| 3. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 51 |

216836
சென்னை-600 008



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1. **முதலமைச்சர்** | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. **கல்வி அமைச்சர்** | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. **வருவாய்த் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.*

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

22. **சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. **சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. **கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. **மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister : The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education : The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity : The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue : The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration : The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| 6. **Minister for Agriculture** | : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. **Minister for Public Works** | : **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | : **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Highways** | : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. **Minister for Food, Public Distribution System and Co-operation** | : **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. **Minister for Milk** | : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| 13. **Minister for Labour** | : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. **Minister for Law** | : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. **Minister for Handlooms** | : **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. **Minister for Backward Classes** | : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest and Printing** | : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. **Minister for Housing** | : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. **Minister for Information and Publicity** | : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | | |
|---|---|---|
| **21. Minister for Animal Husbandry** | : | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | : | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | : | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | : | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | : | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. ரா. சேதுநாதன்**

**திரு. கு. மனோகரன்**

**திரு. வ. வேலுசாமி**

**திரு. சி. ஞானசேகரன்**

**திரு. நா. பெரியசாமி**

**திரு. முகம்மது கோதர் மைதீன்**

*செயலாளர்*

**திரு. டி. சாலமன் ஜெயபால்**

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்திப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந. பூ. .. மயிலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

108. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்

109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

117. தங்கம் தென்னரசு, திரு. வெ. த. .. அருப்புக்கோட்டை

118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2

120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு

121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1

126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்

127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி

130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்

132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

138. நடராஜன், திரு. த. .. செஞ்சி

139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)

141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்

145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி

146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை

147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 13, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 மார்ச் 27, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. டி. ஆர். **பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"*

*முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்து, திட்டமிட்டுச் செலவிடுவதுதான், திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.*

### 1. வரவு-செலவுத் திட்டம், 1998-99, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1998-99ஆம் ஆண்டுக்கான நிதி-நிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கடந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, நான் இந்த அவைமுன் வைத்து உரையாற்றியபோது, அந்த உரையின் இறுதிப் பகுதியில்–*

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

"இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில், சோழ சாம்ராஜ்யத்தின் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில், திருக்குவளை என்ற கிராமத்தில், வேளாண் தொழில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து, இளம் வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ் மொழிப் பற்றும் மிகக் கொண்டு, தந்தை பெரியாருக்குத் தொண்டனாகவும், அறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உழைக்கும் உடன்பிறப்பாகவும் என்னை ஆக்கிக்கொண்டுள்ள, இந்த அறுபதாண்டு காலப் பொது வாழ்வில், எழுபத்து மூன்று வயதுடைய நான், "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற சூளுரையுடனும், (மேசையைத் தட்டும் ஒலி), கடலில் தூக்கி எறிந்தாலும், தமிழ் மக்கள் ஏறிச் சவாரி செய்யும் கட்டுமரமாக மிதப்பேன் என்ற கடமை உணர்வுடனும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வு ஒன்றையே அல்லும் பகலும் நினைவிற்கொண்டு, அவர்களின் அணி வகுப்பில் ஒரு சிப்பாயாகப் பணியாற்றும் பேறு பெற்று, அவர்களின் உயர்வுக்கும் உரிமைக்கும் வழிவகுக்கும் ஆற்றலும் அக்கறையும் உள்ளவர்கள், முன்னேறிய பிரிவினரில் இருப்பின், அவர்களையும் அடையாளம் கண்டு, அரவணைத்து, அவர்தம் துணையுடன், ஒடுக்கப்பட்டோர் உன்னத வாழ்வுக்காகவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனும் சபதம் என்றைக்கு நிறைவேறும் என்ற என் ஏக்கத்தைத் தூக்கத்திலும் கனவாகக் கண்டு, அக்கனவை நனவாக்க வேண்டுமென்பதற்காகவும்-என்காலத்தில் அமைதியானதும், அரிய வளம் கொழிப்பதும், அறிவாற்றல் சிறந்தோங்குவதுமான தமிழ்ச் சமுதாயத்தைக் காண வேண்டுமென்பதில் தணியாத ஆர்வத்தின் காரணமாகத் தயாரிக்கப்பட்டதே இந்த நிதிநிலை அறிக்கை. இதனை நாட்டு மக்களும், கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் விமர்சிக்கும்போது,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

எனும் குறளுக்கேற்ப வரவேற்று மகிழ்ந்து, குறை திருத்தி, நிறை தோன்ற பாடுபடுவேன் என்று உறுதி கூறி, இந்த நிதிநிலை





அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்"

என்று குறிப்பிட்டிருந்தேன். அதே உறுதியுடன் 1997-98ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1998-99ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்த அவைமுன் வைக்கிறேன்.

2. இந்த அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள், ஆளுநர் உரை வாயிலாகத் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதையொட்டி, அவற்றின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் செயல்பாடுகளையும், புதிய திட்டங்களையும், எய்திட இருக்கும் குறிக்கோள், கோட்பாடுகளையும் உள்ளடக்கியதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. வான்புகழ் கொண்ட குறள் தந்த பெரும் பேராசான் வள்ளுவர்க்குத் தமிழகத் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் கண்ட இந்த அரசு, 1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்தறிவித்த முடிவுக்கேற்ப தென்குமரி முனையில் திருவள்ளுவருக்குச் சிலை அமைக்கும் பணி, இடையில் ஏற்பட்ட தொய்வுகளையெல்லாம் கடந்து, 1990 ஆம் ஆண்டு, இதே அரசினால் சிலை அமைப்பதற்கான பணி தொடங்கும் விழா நடைபெற்று, அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் அறிவித்துப் பெருமிதம் கொள்கிறேன்.

> "செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக்கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது" (மேசையைத் தட்டும் ஒலி).

என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டவாறு இந்தத் தலையாய கொள்கையிலிருந்து தடம் பிறழாமல் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

**மத்திய மாநில உறவுகள்**

4. மத்தியில் கூட்டாட்சித் தத்துவமும், மாநிலங்களில் சுயாட்சித் தன்மையும் நிலைபெற வேண்டுமென, வலியுறுத்தி வரும் இந்த அரசு, மத்திய அரசின் அனைத்து வரிகளின் வாயிலாகக் கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பகுதியை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையை முழுமையாக ஏற்காவிடினும், ஐக்கிய முன்னணி அரசு 1-4-1996 முதற்கொண்டு, அனைத்து மத்திய வரிகளின் மொத்த வருவாயில் மாநிலங்களுக்கு 29 சதவீதம் பகிர்ந்தளிக்கப்படும் என்று ஒப்புக்கொண்டுள்ளது. இது குறித்து மத்திய அரசு விரைவாக உரிய நடவடிக்கை எடுத்து செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5. தாமே முன்வந்து வருமானத்தைத் தெரிவிக்கும் திட்டத்தின் (VDIS) வாயிலாக, மத்திய அரசுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் வருவாய் ரூ.10,500 கோடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், 77.5 சதவீதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும், ரூ.4,400 கோடி இந்த நிதி ஆண்டிலும் மீதம் உள்ள தொகை வரும் நிதி ஆண்டிலும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் முந்தைய மத்திய நிதி அமைச்சர் அறிவித்திருந்தார். மாநிலங்களின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மொத்தத் தொகையையும் இவ்வாண்டே மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை இன்றைய மத்திய நிதி அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளதை வரவேற்கிறேன்.

**உள்ளாட்சி மன்றங்கள்**

6. உள்ளாட்சி மன்றங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு விரைவில் முடிவெடுக்கும்.

7. நடப்பு நிதியாண்டில், உள்ளாட்சி மன்றங்களுக்கு, அரசின் வரி வருவாயில் 8 சதவீதத் தொகையாக ரூ. 663 கோடியை இந்த அரசு பகிர்ந்தளித்துள்ளது. வரும் நிதி ஆண்டில் இத்தொகை, ரூ.839 கோடியாக உயர்த்தப்படும். இஃதன்னியில் பத்தாம் நிதிக்குழு வழங்கிய மானியத் தொகையான ரூ. 100 கோடியும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்க கடந்த ஆண்டு தமிழ்நாடு



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

நகர்ப்புற மேம்பாட்டு நிதி ஒன்றை இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த அரசு ஏற்படுத்தியது. இதன் நிதி வாயில்களை அதிகரிப்பதற்காக சுமார் ரூ.800 கோடி அளவிற்கு உலக வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நாம் கடனாகப் பெற இருக்கிறோம்.

8. கடந்த இரண்டு ஆண்டுகளைப் போலவே வரும் ஆண்டிலும், சென்னை நீங்கலாகப் பிற மாநகராட்சிகளுக்கு ரூ. 25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் சொத்து வரி விதிப்பின் அடிப்படை நடைமுறையில், இந்த அரசு கொண்டு வந்த திருத்தங்களின் வாயிலாக ஒளிவுமறைவற்ற, வேண்டுதல் வேண்டாமை இல்லாத, (non-discretionary) நடுநிலையான வரி விதிப்பு முறை ஒன்றுக்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. இதில் சொத்துரிமையாளர்கள் தங்களின் சுய வரி மதிப்பீட்டை அளிக்கும் ஏற்பாடும் அடங்கும். இந்தப் புதிய முறை 1-10-1998 முதல் அமலுக்கு வரும்.

**நிருவாகச் சீர்திருத்தங்கள்**

10. கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, வருவாய்த் துறை நிருவாகத்தில் ஏற்படும் காலத் தாழ்வைத் தவிர்த்திடவும் அடுத்தடுத்துள்ள நிலைகளில் இயங்கும் அலுவலர்களுக்குத் தேவையான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவும், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து உரிய முடிவு எடுக்கும்.

11. கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, ஓய்வுபெற்ற நீதிபதி திரு. இராமானுஜம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட "ஊழல் தடுப்பு உயர்நிலைக் குழு", லோக்பால் சட்டமுன்வடிவை ஆராய்ந்த பின்னர், ஒரு விசாரணை அமைப்பை ஏற்படுத்த வரைவுச் சட்டமுன்வடிவு ஒன்றையும், வேறு பல பரிந்துரைகளையும் அளித்துள்ளது. இவை அரசின் பரிசிலனையில் உள்ளன.

12. ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் வெளிப்படையான நடை முறைகளைக் கையாளுவது குறித்த சட்டமுன்வடிவு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி

வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வரப்பெற்று, நடப்புக் கூட்டத் தொடரில் இச்சட்டமுன்வடிவு கொண்டு வரப்படும.

*13.* **தகவல் பெறும் உரிமைச் சட்டம் (Right to Information Act) நமது மாநிலத்தில்தான் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் நிருவாகம் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் எளிதில் பெற இயலும். இதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.**

*14.* **பொதுமக்களுடன் அதிக தொடர்பு கொண்டிருக்கின்ற அலுவலகங்கள் மற்றும் துறைகள் தங்கள் அலுவலக வளாகங்களில் தகவல் வழங்குவதற்கும், உதவி வழங்குவதற்கும் மையங்களை நிறுவி பொதுமக்கள் அறிய விழையும் தகவல்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள வகை செய்யப்படும்.**

*15.* **தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, எட்டயபுரம் என்ற புதிய வட்டமும், நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் மற்றும் கூடலூர் வட்டங்களைப் பிரித்து குந்தா மற்றும் பந்தலூர் என்ற இரண்டு புதிய வட்டங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், சேலம் மாவட்டத்திலுள்ள வாழப்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், சேலம் மாவட்டத்திலுள்ள சேலம் வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆத்தூர், கங்கவல்லி ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கி புதிய ஆத்தூர் என்ற வருவாய்க் கோட்டமும், புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் வட்டத்தை இரண்டாகப் பிரித்து மணமேல்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூரைத் தற்பொழுது கூடுதல் வட்டமாக இருப்பதை, நிலை உயர்த்தி ஒரு புதிய வட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், வரும் ஆண்டில் தோற்றுவிக்கப்படும்.**

*16.* **இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம்,**



**சருகணி உள்வட்டத்தில் உள்ள 22 வருவாய்க் கிராமங்களையும், ஆனந்தூர் உள்வட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தையும் மொத்தம் 23 வருவாய்க் கிராமங்களை சிவகங்கை மாவட்டத்திலுள்ள தேவகோட்டை வட்டத்துடன் இணைத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம், இராமநாதபுரம்-சிவகங்கை மாவட்டங்கள் பிரிந்ததற்குப் பிறகு, நீண்ட காலமாக அந்தப் பகுதி மக்கள் எழுப்பி வரும் கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது.**

*17.* ஏழை எளிய மக்களுக்கு நடப்பு ஆண்டில் 75,000 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் அளிக்கப்பட வேண்டுமென்ற இலக்கினை அரசு நிர்ணயித்திருந்தது. மேலும் கடந்த பிப்ரவரி மாதம், அண்ணா நினைவு நாளையொட்டி ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகள் அனைத்திற்கும் வீட்டு மனைப் பட்டாக்களை அளித்திட பட்டா வழங்கும் வாரமொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல்கள் நடந்ததால் இச்சிறப்புத் திட்டம் அம்மாதத்தில் செயல்படுத்தப்பட இயலவில்லை. ஆயினும், நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை 2.03 லட்சம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஊரக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்**

*18.* நடப்பு நிதியாண்டில் இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்தும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ரூ. 52 கோடி சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. எனினும், மொத்தம் ரூ.224 கோடி மதிப்பீட்டில் 33,282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்குச் சிறப்பு நிதி ஒதுக்கம் ரூ. 75 கோடியாக உயர்த்தப்படும். அதைப்போல நமக்கு நாமே திட்டத்திற்கும், நடப்பு நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ. 5 கோடி சிறப்பு நிதி, வரும் ஆண்டில் ரூ.10 கோடியாக உயர்த்தப்படும்.

*19.* **1997-98ஆம் ஆண்டில் தொகுதிக்கு ரூ. 25 லட்சம் வழங்கப்பட்டு, தொடக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ. 58.75 கோடி நிதி ஒதுக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது. வரும் ஆண்டில், அது தொகுதிக்கு ரூ. 30 இலட்சமாக (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

20. 1995-ஆம் ஆண்டிலும் மற்றும் முந்தைய ஆண்டுகளிலும் தொடக்கப்பட்டு முடிக்கப்படாத பணிகள் 1,14,143 இருந்தன. போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு தனி முயற்சி எடுத்து 80,610 தொகுப்பு வீடுகள், 1,113 ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள், 1,664 பள்ளிக் கட்டிடங்கள், 5,660 பாசனப் பணிகள், 1,517 மதிய உணவு மையங்கள், 2,135 சாலைப் பணிகள், 16,564 ஏனைய பணிகள் உள்ளிட்ட 1,09,263 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

21. ஆதிதிராவிடர்களுக்கான இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை 1974ஆம் ஆண்டு இந்த அரசுதான் இந்தியாவிலேயே முதல் முறையாகத் தொடங்கியது. இதன் அடிப்படையில்தான் அனைத்திந்திய அளவில் "இந்திரா வீட்டு வசதித் திட்டம்" உருவாக்கப்பட்டது. கடந்த இரண்டாண்டுகளில் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1,27,832 வீடுகள் கட்டப்பட்டன. ஆனால் 1,00,634 வீடுகள் கட்டுவதற்குப் போதுமான நிதியை மட்டுமே, மத்திய அரசு வழங்கியுள்ளது. இருப்பினும், இந்த அரசு மேற்கொண்ட பணியை நிறைவேற்றும் வகையில், இந்தத் திட்டத்தின் கீழ் கூடுதலாக 27,198 வீடுகளைக் கட்டி முடிக்க ரூ. 45.40 கோடிக்கு அனுமதி வழங்கியது. இதில் மைய அரசு அளித்திருக்க வேண்டிய தொகை ரூ. 36.32 கோடி ஆகும். இத்தொகையை வழங்க மைய அரசைக் கேட்டுள்ளோம். வரும் ஆண்டில் 60,000 வீடுகள் கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

22. **வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் 282 வளர்ச்சி வட்டாரங்களிலிருந்து, மாநிலத்திலுள்ள அனைத்து 385 வளர்ச்சி வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.** நடப்பாண்டில் 4,668 கிலோ மீட்டர் தார்ச் சாலைப் பணிகள், 1,333 பள்ளிக் கட்டிடங்கள், 2,611 ஏனைய கட்டிடங்கள், 2,920 சிறுபாசனப் பணிகள், 5,930 நீர்ப் பிடிப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1997-98 வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்திற்கு, ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில அரசின் பங்கான ரூ. 34 கோடி, 1998-99-ல் ரூ. 47.64 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக மாநில அரசின் பங்கான ரூ. 46.78 கோடி ஒதுக்கீடு, 1998-99-ஆம் ஆண்டில் ரூ. 55.09 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

23. நடப்பாண்டில் மத்திய ஊரகத் துப்புரவுப் பணித் திட்டத்தின்கீழ் ரூ. 7.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 48,000 வீட்டுக் கழிப்பிடங்களும், பள்ளிகளுக்காக 700 கழிப்பிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு, வரும் ஆண்டுக்கு ரூ. 13.26 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

24. 1997-98ஆம் ஆண்டில் கிராம ஊராட்சிகளுக்கு 20,000 தெருவிளக்குகள் அமைப்பதற்காக, அரசு ரூ. 7.28 கோடி அனுமதித்துள்ளது. இப்பணி இம்மாத இறுதிக்குள் நிறைவு பெற்றுவிடும்.

**ஊரகக் குடிநீர் வழங்கல்**

25. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் உறுதி அளித்தவாறு பாதுகாக்கப்பட்ட குடிநீரே இல்லாமலிருந்த 154 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

26. நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 10 லிட்டருக்குக் குறைவாகவே குடிநீர் கிடைத்த ஊரகக் குடியிருப்புகளில், நடப்பாண்டில் 4,500 குடியிருப்புகள் நாள் ஒன்றுக்கு, ஒருவருக்குக் குறைந்த அளவு 40 லிட்டர் குடிநீர் கிடைக்கும் வசதியைப் பெறும். வரும் ஆண்டில், எஞ்சியுள்ள 5,398 குடியிருப்புகளுக்கும் இந்த வசதி அளிக்கப்பட்டுவிடும். இதற்காக நடப்பாண்டில் ரூ. 250 கோடியாக உள்ள ஒதுக்கீடு, வரும் ஆண்டில் ரூ. 330 கோடியாக உயர்த்தப்படுகிறது.

27. தாமிரபரணி ஆற்றிலிருந்து கடையநல்லூர் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம், அவினாசி அத்திக்கடவு குடிநீர்த் திட்டம், நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை வரும் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**நகர்ப்புற குடிநீர் வழங்கல்**

28. 1998-99-ஆம் ஆண்டில், சென்னை நீங்கலான நகர்ப்பகுதி குடிநீர் வழங்கலுக்கான ஒதுக்கீடு, ரூ. 40 கோடியாக அதிகரிக்கப்படும். 5 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் அடங்கிய 25 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கு திட்டங்கள், 1998-99ஆம் ஆண்டில் செயல்படுத்தி

முடிக்கப்படும். மேலும் 8 நகராட்சிகளிலும், 20 நகர்ப்பகுதி பேரூராட்சிகளிலும் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் துவக்கப்பட உள்ளன.

**29. திருப்பூர் நகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டப் பணிகள் சுமார் ரூ. 700 கோடி மதிப்பீட்டில் தனியார் துறையில் வரும் ஆண்டில் தொடங்கும்.**

30. 1997 ஜூலை முதல் நவம்பர் திங்கள் வரையில் சென்னைக்கு 2.09 டி.எம்.சி. கிருஷ்ணா நதிநீர் கிடைக்கப்பெற்றது. வடகிழக்குப் பருவமழையில் மாநகரில் உள்ள நீர்த்தேக்கங்களுக்குப் போதிய நீர் வரப்பெற்றதால், நீர்வரத்து நிறுத்தப்பட்டது. ஆந்திர மாநிலப் பகுதிகளிலுள்ள கால்வாயில் ஏற்பட்டுள்ள கசிவுகளைத் தடுக்கும் பொருட்டு, கரைகளுக்குச் சிமெண்ட் காரைபூசி வலுப்படுத்தும் பணிகள் அவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிக்கப்பட்டு, மறுபடியும் இவ்வாண்டு, ஜூலை மாதம் முதல் கிருஷ்ணா நீர்வரத்து துவங்கும். இத்திட்டத்திற்காக நாம் இதுவரை ஆந்திர அரசுக்கு ரூ. 512 கோடி வழங்கியுள்ளோம்.

31. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும், சென்னைக் குடிநீர் இரண்டாம் திட்டத்திற்காக, வரும் ஆண்டுக்கு ரூ. 135 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக வசதி மேம்பாடு மற்றும் திடக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக, சென்னைக் குடிநீர் மூன்றாம் திட்டம் ரூ. 1,181 கோடி ஒதுக்கீட்டுடன் தொடக்கப்படும். மேலும் ஜப்பான் வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் (OECF) உதவியுடன் கூடிய, கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**32. கோவை, மதுரை, திருநெல்வேலி மாநகராட்சிகளிலும் சென்னை புறநகரிலுள்ள ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், அம்பத்தூர் நகராட்சிகளிலும் மற்றும் ஈரோடு, கரூர் நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடை வசதிகளை அளிக்கும் திட்டம் ரூ. 269 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவியோடு வரும் ஆண்டில் தொடக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**



**நகர்ப்புற வளர்ச்சி**

33. சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ரூ. 366 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள், வரும் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள் (Traffic Management Schemes), சாலை அமைப்பை நேர்படுத்தும் மேம்பாடுகள் (Improvement of Road Geometrics), சாலைச் சந்திப்புகளில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு சமிக்ஞைகள் (Traffic Signals), நடைபாதை வசதிகள், வண்டிகள் நிறுத்துமிட வசதிகள், மேம்படுத்தப்பட்ட சாலை விளக்கு வசதிகள், மேம்பாலங்கள் ஆகியவை அடங்கும்.

34. சென்னையைச் சுற்றியுள்ள முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ரூ. 212 கோடி செலவில் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) கடனுதவியுடன் வருமாண்டில் செயல்படுத்தப்படும்.

35. கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில், சென்னைப் பெருநகர் பகுதிகளுக்காக, ரூ. 326 கோடி செலவிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்று நான் குறிப்பிட்டிருந்தேன். நடப்பு நிதியாண்டில், ரூ. 60 கோடி செலவில் கூடுதல் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ. 158 கோடி செலவிடப்பட்டு 9 திட்டப் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

**36. பருவமழையின்போது மக்களின் அன்றாட வாழ்வு, பொதுச் சுகாதாரம் மற்றும் சென்னை மாநகரின் சாலைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் பொருட்டு, சென்னையில் உள்ள பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி, அடையாறு போன்ற நீர்வழிகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்தல், கழிவுகள் கலவாது தடுத்தல், சுற்றுப்புறத்தை அழகுபடுத்தல், நீர்வழிப் போக்குவரத்து மீட்டமைத்தல், மனமகிழ் வசதிகளை உண்டாக்குதல், கடலேற்றத்தைப் பயன்படுத்தித் தூய்மைப்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இவற்றின் பயன்பாட்டைப் பெருக்கிட, பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**37. இந்தத் திட்டப் பேருருவை வடிவமைக்கவும், செயல் திட்டத்தை வகுத்திடவும், தகுதி வாய்ந்த கலந்துரை நிறுவனத்தைத்**

(Consultant) தேர்வு செய்ய 13 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அவை, தற்போது மதிப்பீட்டுக் குழுவின் ஆய்வில் உள்ளன. விரைவில் முடிவுகள் எடுக்கப்பட்டு, திட்டச் செயலாக்கம் தொடங்கும்.

38. இஃதன்னியில், சுமார் ரூ. 300 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் பல்வேறு வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

### பொது விநியோகம்

39. ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுவிநியோக முறையில், புதிய இரண்டு வண்ண குடும்ப அட்டை முறை 1-6-1998 முதற்கொண்டு சென்னை மாநகரிலும், மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும், படிப்படியாக மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் செயல்படுத்தப்படும்.

40. அனைத்து நியாயவிலைக் கடைகளும் ஒவ்வொரு நாளும் கடையின் சரக்கு இருப்பை எழுதி வைப்பதுடன், எடை குறைவு, பொருட்கள் வழங்காமை போன்ற குற்றச்சாட்டுகளைக் குடும்ப அட்டைதாரர்கள் பதிவு செய்யும் வகையில் ஒரு புகார்ப் புத்தகத்தை வைத்திருக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

41. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர், அவர்களுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று பார்வையிட உரிமையுண்டு என்றும், கடைகளில் குறைபாடுகள் கண்டறியப்பட்டால், அவற்றை மாவட்ட மற்றும் கோட்டக் குழுக்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

### வேளாண்மை

42. நமது மாநிலத்தில் உணவு தானியங்களின் உற்பத்தி சென்ற ஆண்டு 76.42 இலட்சம் டன்னாக இருந்தது. இந்த ஆண்டு 94.92 இலட்சம் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

43. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு, வரும் ஆண்டில் ரூ. 82 கோடியும்,





வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.9.85 கோடியும் வரும் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

44. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தவாறு, தமிழ்நாட்டில் நபார்டு (National Bank for Agriculture and Rural Development) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட வேளாண்மை வளர்ச்சி நிதி நிறுவனம் [Agri Development Finance (Tamil Nadu) Limited] சென்னையில் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனத்திற்கு மாநில அரசு, பங்கு மூலதனமாக இதுவரை ரூ. 1.8 கோடி வழங்கியுள்ளது. இதனால், மலர்ச்செடி வளர்ப்பு, காய் கனிகள், காளான் வளர்ப்பு போன்ற உயர் தொழில்நுட்ப வேளாண்மைத் தொழில்களுக்கு வழங்கும் கடன் அளவு அதிகரிக்கும். இந்நிதி நிறுவனத்தால் இதுவரை 5 திட்டங்களுக்கு ரூ. 6.46 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

45. தரிசு நில, நீர்வரத்துப் பகுதிகள் மேம்பாடு குறித்த டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் அறிக்கை வரப்பெற்று, மாநிலத் திட்டக் குழுவின் ஆலோசனையுடன் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மானாவாரி வேளாண்மை விளைச்சலை அதிகரிக்க ஒரு பெரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

### பாசனம்

46. பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தி, பாசன நிர்வாகத்தில் விவசாயிகள் பங்கேற்க வகைசெய்யும், நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 1140 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு வரும் ஆண்டில் ரூ. 186 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ. 80 கோடி மதிப்புள்ள 43 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் ரூ. 352 கோடி மதிப்பீட்டில் 152 பணிகள் மேற்கொள்ளப்படும்.

47. ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் நிதியுதவியுடன் ஏரிகளைச் சீரமைக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணி ரூ.115 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில்

இதுவரை 288 ஏரிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 12.89 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

**48. நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த காவிரிப் பாசன வாய்க்கால்களின் தூர்வாரும் பணிகள் நடப்பாண்டில் ரூ. 10 கோடிக்கு மேற்பட்ட செலவில் மிக நேர்த்தியாக நடைபெற்றுள்ளன. வரும் ஆண்டிலும் அதற்காக ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டு, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடப்படுவதற்கு முன்னர், பணிகள் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).**

49. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நாராயண காவேரி, ரகுநாத காவேரி மற்றும் சங்கரத்தேவன் பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் திட்டம் ரூ. 7.41 கோடி மதிப்பீட்டில் வரும் ஆண்டில் செயலாக்கப்படும். இதனால் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் சாயல்குடி பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகள் மேம்படுவதோடு, குடிநீர் வசதியும் பெருகும்.

### மீனவர் நலம்

50. கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு, மீன் பிடிக்கச்செல்ல இயலாத மாதங்களில் உதவித் தொகை அளிக்கும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் நடப்பு ஆண்டில் 1.19 இலட்சம் மீனவர்கள் பயன் அடையும் வகையில் அரசு ரூ. 8.57 கோடி செலவிட்டது. வரும் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

51. நடப்பு ஆண்டில் ரூ. 12.8 கோடி மதிப்பீட்டில் மீனவர்களுக்கு 4000 வீடுகள், சிங்காரவேலர் திட்டத்தின்கீழ் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. வரும் ஆண்டில் ரூ. 13.15 கோடி ஒதுக்கப்பட்டு, இத்திட்டத்தில் மேலும் 4,000 வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டப்படும்.

**52. கண்ணாடி இழையால் தயாரிக்கப்பட்ட கட்டுமரங்களைப் பயன்படுத்த மீனவர்களை ஊக்குவிக்கும் வகையில், வரும் ஆண்டில் 100 மீனவர்களுக்கு ரூ. 50,000 மதிப்புள்ள கண்ணாடி இழை கட்டுமரங்கள் மானிய விலையில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**



### கால்நடை வளம்

53. நடப்பாண்டில் 60 இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் ரூ. 1.48 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன. 20 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாகவும், மூன்று கால்நடை மருத்துவமனைகள், முதல்தர மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் மேலும் 30 கால்நடை மருந்தகங்கள் ரூ. 81 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

### சாலைகள்

**54. நடப்பாண்டில் ரூ. 83.49 கோடி செலவில் 216 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் மேலும் 301 கிராமங்களுக்கு ரூ. 101.73 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும். இதன் வாயிலாக 1,000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய அனைத்து கிராமங்களும் நமது மாநிலத்தில் இணைப்புச் சாலை வசதியைப் பெற்றுவிடும். அடுத்தகட்டமாக, 500 முதல் 1,000 வரை மக்கள் தொகையுள்ள 4,986 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

55. அதிக அளவில் போக்குவரத்து உள்ள 750 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகளை உலக வங்கி உதவியுடன் ரூ. 750 கோடி செலவில் மேம்படுத்தும் திட்டமும், ஹட்கோ மற்றும் நபார்டு நிறுவனத்தின் கடன் உதவியுடன் ரூ. 360 கோடி செலவில் 104 பாலங்கள் கட்டும் திட்டமும், வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

56. சென்ற நிதிநிலை அறிக்கை உரையில் மைய அரசின் கொள்கைக்கு ஏற்ப தேசிய நெடுஞ்சாலைகளைத் தனியார் துறை மற்றும் அரசின் கூட்டு முயற்சி மூலம் அகலப்படுத்தி, தரம் உயர்த்திப் பராமரிக்கும் திட்டங்களுக்கு, முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறியிருந்தேன். அதற்கேற்ப பின்வரும் பணிகள் தொடங்கப்படும்.

* ரூ. 200 கோடி மதிப்பீட்டில் மாமண்டூரிலிருந்து திண்டிவனம் வரை செல்லும் 55 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச்சாலை.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

* ரூ. 250 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் வரை செல்லும் 61 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச் சாலை.

* ரூ. 92 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் புறவழிச் சாலை.

* ரூ. 20 கோடி மதிப்பீட்டில் காரனோடையில் புதிய பாலம்.

57. தாம்பரத்திலிருந்து மதுரவாயில் வரை செல்லும் 19 கி.மீ. நீளமுள்ள சென்னை புறவழிச் சாலைப் பணிகள் ரூ. 43 கோடி மதிப்பீட்டில், வரும் ஆண்டு தொடங்கப்படும். மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மதுரை -- திருச்சி சாலையையும், மதுரை--கன்னியாகுமரி சாலையையும் இணைக்கும் புறவழிச் சாலை அமைக்கும் பணி ரூ.36 கோடி மதிப்பீட்டில் அடுத்த சில மாதங்களில் தொடங்கப்படும். கரூர் நகரில் அமராவதி ஆற்றின் மேல் ரூ. 12 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும். நீண்டநாள் கோரிக்கையான பழவேற்காடு பாலம் அமைக்க ஆரம்ப முயற்சிகள், வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**58. இந்த அரசின் கோரிக்கையை ஏற்று முந்தைய மத்திய அரசு, நாகப்பட்டினத்திலிருந்து கரூர் வரையிலுள்ள 217 கி.மீ. மாநில நெடுஞ்சாலை, சேலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை வரையிலுள்ள 150 கி.மீ. மாநில நெடுஞ்சாலை மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து கிருஷ்ணகிரி வரையிலுள்ள 171 கி.மீ. மாநில நெடுஞ்சாலை ஆகிய மொத்தம் 538 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றி அறிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)**

59. மாநிலச் சாலைப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு, நடப்பாண்டில் ரூ. 228 கோடியிலிருந்து வரும் ஆண்டில் ரூ. 254 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

60. பழைய பேருந்துகளைக் கழிக்கவும், புதிய தடங்களில் பேருந்துகள் விடவும் நடப்பாண்டில் 3,974 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 3,600 புதிய பேருந்துகள்



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

வாங்க, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் பங்கு மூலதனம் அளிக்க ரூ. 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**61. சென்ற நிதிநிலை அறிக்கையில் பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளுக்குத் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை இயக்க அனுமதிக்கலாம் என்ற முடிவினை அறிவித்திருந்தேன். இதனைச் செயல்படுத்தும் வகையில் சிறிய பேருந்துகளை இயக்க உரிமம் பெறுவதற்கான 300-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 14 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு விரைவில் முடிவெடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

62. ரூ. 260 கோடி செலவில் சென்னை, கடற்கரையிலிருந்து லஸ் வரை செல்லும் சென்னை விரைவு இரயில், முதலாவது கட்டப் பணிகள் நிறைவுற்று இரயில்கள் செல்லத் தொடங்கியுள்ளன. லஸ் முதல் வேளச்சேரி வரையிலான 10.3 கி.மீ. நீளமுள்ள இரண்டாவது கட்டப்பணி ரூ. 605 கோடி மதிப்பீட்டில் வரும் ஆண்டில் தொடங்கும். இப்பணியின் செலவில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு ஏற்கும்.

**63. சென்னை மாநகரின் வளர்ந்துவரும் விமானப் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையம், தனியார் முதலீட்டுடன், ஒரு கூட்டு முயற்சியாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், மைய அரசின் விமானப் போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து, இதற்கான ஒரு விரிவான ஆய்வை மேற்கொள்ள இருக்கிறது.**

64. சென்னையிலுள்ள பன்னாட்டு விமான நிலையத்தை விரிவுபடுத்த கூடுதல் நிலம் தேவைப்படுகிறது. நமது வேண்டுகோளுக்கிணங்க மைய அரசின் பாதுகாப்பு அமைச்சகம், பன்னாட்டு விமான நிலையத்தை ஒட்டியுள்ள 1.75 ஏக்கர் நிலப்பரப்பை இதற்காக விமானப் போக்குவரத்து ஆணையத்திற்கு ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளது.

**மின் வசதி**

65. வரும் நிதியாண்டில் தமிழ்நாடு மின்வாரியத்தின் திட்ட ஒதுக்கீடு ரூ. 903 கோடியாக உயர்த்தப்படும். இதற்காக மாநில அரசு மின் வாரியத்துக்கு ரூ. 250 கோடி மூலதனப் பங்குத் தொகையினை வழங்கும். மீதமுள்ள தொகையினை நிதி நிறுவனங்களிடமிருந்து மின் வாரியம் கடனாகப் பெறும்.

66. 1989-90ஆம் ஆண்டு, இந்த அரசு தொடங்கிய வடசென்னை அனல் மின் திட்டத்தைத் தவிர, இடைக்காலத்தில் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் எதுவும் அமைக்கப்படாத நிலையில் மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 5,792 மெகாவாட் மின் உற்பத்திக்குத் தனியார் மின் நிறுவனங்களுடன், மின்சாரம் வாங்கும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அவற்றில், 196 மெகாவாட் திறனுள்ள பேசின் பிரிட்ஜ் மின் திட்டத்தில், வரும் ஆண்டில் மின் உற்பத்தித் தொடங்கும். 250 மெகாவாட் திறனுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டம், 330 மெகாவாட் திறனுள்ள, பிள்ளைப் பெருமாநல்லூரில் அமைக்கப்படவிருக்கும் இயற்கை வாயு மின்திட்டம், 1050 மெகாவாட் திறனுள்ள வடசென்னை இரண்டாம் கட்ட அனல் மின் நிலையம், தூத்துக்குடியில் அமைக்கவிருக்கும் 525 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம், சமயநல்லூர் மற்றும் சாமல்பட்டி ஆகிய இடங்களில் மொத்தம் 212 மெகாவாட் திறனுள்ள டீசல் மின் திட்டங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணி வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

67. பெரிய மின் திட்டங்கள் நிறைவேறி மின் உற்பத்தி செய்ய சில ஆண்டுகளாவது ஆகும் என்பதையும், விரைவில் வளர்ந்துவரும் மின்சாரத் தேவையையும் கருத்தில் கொண்டு, குறைந்த காலத்தில் மின் உற்பத்தி செய்யக்கூடிய 20 திரவ எரிவாயுத் திட்டங்களைச் செயல்படுத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு தேவையான திரவ எரிபொருளைத் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யாததால், 5 திட்டங்கள் மட்டுமே 488 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளன. தொடர்ந்து மத்திய அரசைக் கூடுதல் திரவ எரிபொருள் ஒதுக்கீடு செய்ய வலியுறுத்துவோம்.

68. மின் அனுப்புகை மற்றும் விநியோகத்தினை மேம்படுத்தும் பணிகளுக்கும், மின் அழுத்தத்தைச் சீராக்கி, மின் இழப்பிணைக்





குறைக்கும் பணிகளுக்கும் மின்சார வாரியம் நடப்பாண்டில் ரூ. 436 கோடி செலவிடும். வரும் ஆண்டில் இப்பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ. 465 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு**

69. தொழில் வளர்ச்சிக்கு இணக்கமான இந்த அரசின் கொள்கைகள், ஒளிவு மறைவற்ற வகையில் முடிவு எடுத்தல், உயர் தொழில்நுட்ப மனித ஆற்றல் ஆகியவை வெளிநாடு மற்றும் வேறு மாநில முதலீட்டாளர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்த்துள்ளன.

70. தனியார் தொழில் முனைவோர்களுடன் சேர்ந்து பல பெரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

71. எண்ணூரில் பெட்ரோலிய-இரசாயனத் தொழிற் பூங்காவும், ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் டன் திரவ எரிவாயு சேமிப்புக் கிடங்கும், 2,000 மெகாவாட் மின்திட்டமும் ஜெயங்கொண்டத்தில் 500 மெகாவாட் பழுப்பு நிலக்கரி மின் திட்டமும் கடலூரில் ரூ. 2,650 கோடி செலவிலான பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலையும் விரைவில் தொடங்கிட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

72. திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.700 கோடி திட்டச் செலவில் உயர் தொழில்நுட்பத் தொழில் பூங்காவும், அத்தொழில் பூங்காவிற்குள் நிறுவப்படவிருக்கும் புதிய தொழில்களில் எதிர்பார்க்கப்படும் ரூ. 7,000 கோடி முதலீடும் திருநெல்வேலி மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சி மையமாக மாற்றும். இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

73. காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, தூத்துக்குடி, ஈரோடு, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் தொழில் முனைவோர்களுக்கு அளிப்பதற்காக 7,156 ஏக்கர் பரப்பளவு நிலங்களை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் (TIDCO) 8,444 ஏக்கர் பரப்பளவு நிலங்களை, தமிழ்நாடு அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனமும் (TACID) 10,733 ஏக்கர் பரப்பளவு நிலங்களை, தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகமும் (SIPCOT) கையகப்படுத்தி வருகின்றன.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

74. தமிழ்நாட்டில் கணினி மென்பொருள் (Software) கணினி இயந்திரங்கள் (Hardware) தொழில் வளர்ச்சியையும், அதனைச் சார்ந்த பணிகளையும் ஊக்குவிக்க "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை"யை அறிவித்துள்ளோம். சென்னையில் தரமணியில் 7.5 ஏக்கர் பரப்பளவில் எல்காட் நிறுவனத்துடன் இணைந்து மென்பொருள் தொழில் பூங்கா (Software Park) ஒன்றினை அமைக்க, டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இத்திட்டம் மென்பொருள் நிறுவனங்களுக்குத் தேவையான உலகத் தரம் வாய்ந்த வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

75. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, தகவல் தொழில்நுட்பத்திற்கான அடிப்படையை உருவாக்கும் வகையிலும், 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற, தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் உலகத்தில் முன்னோடியாக இருக்கும் விதத்திலும், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் (Tamil Nadu Institute of Information Technology) நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் வளாகம் தரமணியில் அமையும் நிரந்தரக் கட்டிடங்கள் கட்டப்படும் வரை, பெருங்குடியில் உள்ள தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் கட்டிடத்தில், வரும் கல்வி ஆண்டில் இம்மையம் செயல்படத் தொடங்கும். வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**76. சென்னை மாநகரை நாட்டின் ஒரு பெரும் வணிக மற்றும் நிதி மையமாக உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்நோக்கத்திற்காக, தமிழ்நாடு தொழில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனம் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் ஒரு வணிக மற்றும் நிதி மையத்தை (Business-cum-Financial Centre) அமைக்கும்.**

77. மறைமலைநகரில் ரூ. 24 கோடி மதிப்பீட்டில் ஒளி ஊடு இழை தொலைத் தொடர்பு கம்பிகள் (Optic fibre cable) தயாரிக்கும் தொழிற்சாலை, அந்நகருக்கருகில் ரூ. 150 கோடி மதிப்பீட்டில் மோட்டார் தொழிற்சாலைகளுக்கு உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்பூங்கா, விழுப்புரம் மாவட்டத்தில் ரூ. 125 கோடி மதிப்பீட்டில் சிறு மரப்பலகை (Particle Board) தயாரிக்கும் தொழிற்சாலை, இருங்காட்டுக்கோட்டையில் அமையவுள்ள ரூ.45.70 கோடி



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

மதிப்பீட்டில் செயற்கை மரப்பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் வரும் ஆண்டில் தொடக்கப்படும்.

78. ஆண்டு ஒன்றுக்கு 1,20,000 கார்கள் தயாரிக்கும் திறனுள்ள ஹூண்டாய் கார் தொழிற்சாலை, வரும் அக்டோபர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். இதனால் 2,800 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 9,750 நபர்களுக்கு துணைத் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பும் கிட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

79. தமிழ்நாடு அரசு, மத்திய அரசு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் ரூ. 2 கோடி செலவில், சென்னையில் சிறுதொழில் தொழில்நுட்ப மையத்தை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இம்மையம், குறைந்த விலையில் உயர்ந்த தரமான பொருள்களை உற்பத்தி செய்ய உதவும். இத்திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக, வரும் ஆண்டில் ரூ. 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**80. சென்ற வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரில் அறிவித்தபடி, முதன் முறையாக ஜவுளிக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கைத்தறி, விசைத்தறி, மில்துறை ஆகியவற்றின் உற்பத்தி, ஒருங்கிணைந்த முறையில் வளரவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும், பருத்தி உற்பத்தியை அதிகரிக்கவும் இக்கொள்கை முனைப்புடன் செயல்படுத்தப்படும்.**

**81. நன்றாக இயங்கிவந்த கூட்டுறவு நூற்பாலைகள் கடந்த ஆட்சியில் மிகுந்த நட்டத்திற்கு உள்ளாயின. இவற்றின் செயல்பாட்டைச் சீரமைக்கும் பொருட்டு, வல்லுநர்கள் உதவியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து நான் அண்மையில் கைத்தறித் துறை அமைச்சருடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினேன். அதன் அடிப்படையில், இந்தப் பதினெட்டு நூற்பாலைகளுக்கு நபார்டு நிதி நிறுவனத்தின் ஆலோசனையுடன் புனரமைப்புத் திட்டங்கள் விரைவில் உருவாக்கப்படும். அவை தொழிலாளர்கள் மற்றும் வங்கிகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு, கூட்டுறவு நூற்பாலைகள் மீண்டும் நல்ல முறையில் இயங்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

## சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனவளம்

82. தமிழ்நாடு வனவளத் திட்டத்தின் கீழ் 63,576 ஹெக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளுக்காக நடப்பாண்டில் ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரும் ஆண்டில் மேலும் 86,030 ஹெக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளுக்காக ரூ.104 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

83. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாசுக் கேடு விளைவிக்கின்ற 2,504 தொழில் பிரிவுகள் பயனடைகிற வகையில் 56 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP) அமைக்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளுக்கு அரசு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன்னர், பொதுமக்களின் கருத்தைப்பெற மாவட்டங்களில் - "பொதுமக்கள் விசாரணைக் குழுக்களை" (Hearing Panels) அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

84. பவானி, குமாரபாளையம், ஈரோடு, பள்ளிப்பாளையம், திருச்சி ஆகிய நகரங்களில் காவிரி ஆற்றில் மாசுக் கேட்டினை அகற்றும் மத்திய நிதியுதவித் திட்டத்திற்கு வரும் ஆண்டில் ரூ. 8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானல், உதகமண்டலம் ஏரிகளின் சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்த ரூ. 47 கோடி செலவில் திட்டங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசின் அனுமதி பெற்று, வரும் நிதியாண்டில் இவை செயல்படுத்தப்படும்.

## கல்வி

85. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி புதிதாக 168 தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 41 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 71 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலையுயர்த்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 297 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்ட ரூ. 11.50 கோடியும், 119 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ. 10.00 கோடியும், 200 அரசு பெண்கள் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் கழிவறைகள் கட்ட ரூ. 1.44 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

86. தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளிகள் இல்லாத 700 குக்கிராமங்களில் வரும் நிதியாண்டில், 300 குக்கிராமங்களிலும்





அடுத்த ஆண்டில் 400 குக்கிராமங்களிலும் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, தொடக்கப்பள்ளி இல்லாத குக்கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் நிதி ஆண்டில் 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும், 80 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவும், 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

87. நடப்பாண்டில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2,938 கோடிக்கு மாறாக, வரும் ஆண்டில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3,568 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 50 மேல் நிலைப் பள்ளிகளில் கணினி பாடத்திட்டங்களைத் தொடங்க ரூ. 3.52 கோடியும், 500 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ. 10 கோடியும், 300 பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்ட ரூ.10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

88. மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு நடப்பாண்டில் ரூ.45 கோடியிலிருந்து வரும் ஆண்டில் ரூ. 57 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது பள்ளிகளில் மதிய உணவு பெறும் மாணவ மாணவியர்களுக்கு மட்டுமே இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வரும் கல்வியாண்டில் இருந்து அரசு, உள்ளாட்சி மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவியர் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இலவசப் பாடப்புத்தகத் திட்டத்திற்கு, வரும் ஆண்டில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய இவ்வரசு, அதனைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அதற்காக, வரும் ஆண்டில் ரூ. 66 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

89. சுயநிதிக் கல்லூரிகளின் செயல்பாடு பற்றிய டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்று தமிழ்நாட்டில், பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு புதிய "ஒற்றைச் சாளர முறை"

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

(Single Window System) நடப்பாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் நன்கு வரவேற்றுப் பாராட்டியுள்ளனர். இதன்படி தகுதியின் அடிப்படையிலும் அவர்கள் தெரிவிக்கும் விருப்பத்தின் அடிப்படையிலும் அவர்கள் சேர்ந்து பயில விரும்பும் கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள அனுமதி வழங்கப்படுவதுடன் முதல் ஆண்டிலேயே அவர்களுக்கான பாடப் பிரிவுகளும் ஒதுக்கப்படுகின்றன. சுயநிதி பொறியியல் கல்லூரிகள் இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் பாடப் பிரிவு ஒதுக்குவதை வணிகமாக்கி இருந்ததை இந்தப் புதிய முறை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. ஒற்றைச் சாளர முறை வருமாண்டிலிருந்து தொழில்நுட்பப் பயிலகங்களிலும் (Polytechnics) அறிமுகப்படுத்தப்படும். உயர்மட்டக் குழுவின் மற்ற பரிந்துரைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

*90.* உலக வங்கி நிதியுதவி பெறும் தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டம் (Technician Education Project) ரூ. *95* கோடி செலவில் நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், கட்டிடங்கள், மாணவரில்லங்கள், ஆய்வுக் கூடங்கள், சாதனங்கள், புத்தகங்கள், கணினிகள், புதிய பாடத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு வகை செய்து நம் மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களை நவீனமயமாக்க உதவுகிறது. இத்திட்டத்திற்காக, வரும் ஆண்டிற்கு ரூ. *21* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாடு

*91.* தமிழ்நாட்டு வரலாற்றை எழுதி வெளியிடும் பணியை இந்த அரசு *1970*ஆம் ஆண்டு தொடக்கம் செய்தது. இதுவரை மூன்று தொகுதிகளும், நான்காம் தொகுதியில் ஒரு பகுதியும் வெளியிடப் பட்டுள்ளன. வரலாற்று வரைவுத் திட்ட வல்லுநர்க் குழுவை இவ்வரசு திருத்தியமைத்து, பணிகளை விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. *5* இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*92.* இசையிலும், கலையிலும் இளம் மாணவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில், நான் சென்ற ஆண்டு அறிவித்தபடி சேலம், திருச்சி, திருவாரூர், திருநெல்வேலி,



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தொடக்கப்பட்டுள்ளன. இவை பாட்டு, பரத நாட்டியம், நாதஸ்வரம், தவில் போன்றவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன. வரும் ஆண்டில் மேலும் *5* மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்படும்.

*93.* தஞ்சாவூர், சத்திரம் நிருவாகத்தின் கீழ் இயங்கி வந்த திருவையாறு அரசர் கல்லூரியில் இசைத் துறை ஒரு துறையாக இயங்கி வந்தது. இத்துறை தனியாக பிரிக்கப்பட்டு, கல்லூரி நிலை அளிக்கப்பட்டு, அரசு இசைக் கல்லூரியாக திருவையாறில் செயல்பட்டு வருகிறது.

**94. கடந்த ஆண்டுகளில் தமிழ்ப் பேரறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்தம் குடும்பத்தாருக்கு உரிய நிதிகள் வழங்கியது போலவே இந்த ஆண்டும் தமிழ்த் தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு.வி.க. அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி அவரது வழித் தோன்றல்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**95. தமிழர் வரலாறு-பண்பாடு-கலை-வீரம் பற்றிய "புதின இலக்கியம்" பல படைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை அரசுடைமையாக்கிட இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**96. சிறந்த எழுத்தாளராகவும் திரைப்பட வசனகர்த்தாவாகவும் விளங்கிய மறைந்த தணிகாசலம் என்ற இளங்கோவன் அவர்களுடைய குடும்ப நல நிதியாக இரண்டு இலட்சம் ரூபாய் அரசால் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**97. இந்திய நாட்டு விடுதலைக்காக நீண்டகால சிறைவாசம் ஏற்றவரும் தலை சிறந்த தமிழ் இலக்கியவாதிகளில் ஒருவருமான வேலூர் க. இராகவன் ஜமதக்னி அவர்கள், இந்திய மொழிகளிலேயே, முழு அளவில் முதன் முதலாக தமிழில் எழுதியுள்ள காரல் மார்க்சின் "மூலதனம்" மற்றும் "மிகை மதிப்பு" ஆகிய நூலினை ஆறாயிரம் பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளியிடுவதற்கு 5 இலட்சம் ரூபாய் நிதியளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)**



சென்னை-600 008
216836. 12, 3, 98
N98.4111

## மக்கள் நல்வாழ்வு

98. மக்கள் நலவாழ்வுத் துறைக்கான ஒதுக்கீடு நடப்பு ஆண்டில் ரூ. 877 கோடியிலிருந்து வரும் ஆண்டில் ரூ. 1096 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 49.68 கோடி செலவில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, புதுவகையான வடிவமைப்பில் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் 296 கட்டிடங்கள் இம்மாத முடிவுக்குள் கட்டி முடிக்கப்படும். மீதமுள்ள கட்டிடங்கள் வருமாண்டுக்குள் கட்டி முடிக்கப்படும். இதனால் இம்மாநிலத்திலுள்ள அனைத்து 1,408 ஆரம்ப சுகாதார நிலையங்களும் நிரந்தரக் கட்டிடங்களில் இயங்கும். இத்துடன் ரூ.9 கோடி செலவில் 200 சுகாதாரத் துணை நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

99. ஆரம்ப சுகாதார நிலையங்களை நல்லமுறையில் பராமரிக்க, அவற்றைத் தொழில் நிறுவனங்கள் ஏற்க முன்வந்திருப்பதை கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் நான் அறிவித்திருந்தேன். இது தொடர்பாக, தமிழ்நாட்டின் தொழில் அதிபர்களுடன் நான் நடத்திய கூட்டத்தில், இத்திட்டத்தில் அவர்கள் பங்கேற்க ஆர்வம் காட்டியுள்ளனர். முதல் கட்டமாக 40 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பராமரிப்புக்காகத் தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும்.

100. அரசு மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் பராமரிக்கும் பணிக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 23.6 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மருந்துகளுக்காக ரூ.106 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

101. ரூ. 23.14 கோடி உலக வங்கி உதவியுடன் மதுரை, தேனி மாவட்டங்களில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம் நடப்பாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1,000 குழந்தைகளுக்கு 54 என்ற வீதத்தில் உள்ள சிசு இறப்பு வீதத்தைக் குறைக்க, மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

102. முற்றிலும் மக்கள் தாமே விரும்பி ஏற்றுக் கொண்டதன் அடிப்படையிலேயே தமிழ்நாடு பிறப்பு வீதத்தை 1,000 மக்களுக்கு 19.2 என்ற வீதத்திற்குக் கொண்டு வந்துள்ளது என்பதையும் இந்தச்



சாதனை ஏனைய மாநிலங்கள் பின்பற்றுகின்ற முன் மாதிரியாக இருக்கிறது என்பதையும் நான் மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சத்துணவு

103. ரூ.425 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட உலக வங்கி நிதியுதவி பெற்ற தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் (Tamil Nadu Integrated Nutrition Project), 1997 டிசம்பரில் நிறைவு பெற்றது. இத்திட்டத்தின் மூலம் 24 மாவட்டங்களைச் சேர்ந்த 318 வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள 14.31 இலட்சம் சிறார் பயனடைத்துள்ளனர். 1997 டிசம்பருக்குப் பிறகும் இத்திட்டம் மத்திய, மாநில நிதிகளிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

104. மாநில அரசின் சத்துணவுத் திட்டத்திற்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 464 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 73.41 இலட்சம் சிறார் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்ட முட்டை, வரும் ஆண்டிலிருந்து வாரம் ஒரு முறை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

## மகளிர் நலன்

105. மகளிர் மேம்பாட்டுக்காக நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ. 55 கோடி நிதி ஒதுக்கீடு, வரும் ஆண்டுக்கு ரூ.91.20 கோடியாக உயர்த்தப்படும்.

106. இந்த ஆண்டு, இம்மாநிலத்திலுள்ள 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் மகளிர் திட்டம் வரும் ஆண்டில் மேலும் 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு வருமாண்டில் ரூ. 12 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 8 மாவட்டங்களில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியின் (International Fund for Agricultural Development) நிதியுதவி பெறும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம், 1998 டிசம்பர் இறுதியில் முடிவுற இருப்பதால், இந்த 8 மாவட்டங்களும் மகளிர் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

107. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் மொத்தம் 53,145 மணமகள்கள்

பயன் பெறும் வகையில் ரூ. 53.15 கோடிக்கு அரசு ஏற்பளித்துள்ளது. **வரும் ஆண்டிற்கான ஒதுக்கீடு 60,000 பெண்கள் நிதியுதவி பெறும் வகையில், ரூ. 60 கோடியாக அதிகரிக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி). அரசின் வேண்டுகோளுக்கு இணங்க தனியாரிடமிருந்து நன்கொடையாக இத்திட்டத்திற்கு ரூ.5 கோடியே 16 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

108. தகவல் தொழில் நுட்பத்தைப் போன்றே உயிரியல் தொழில் நுட்பமும் (Biotechnology) அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திறன் படைத்த, வளர்ந்துவரும் தொழில் நுட்பமாகும். இது வணிக ரீதியில் புதிய முறையில் பல்வேறு பொருட்களைக் குறைந்த விலையில் தயாரிக்கும் தொழில் நுட்பமாக விளங்குகிறது. இதன் பயன்கள் நம் மாநிலத்திற்கு விரைவில் கிடைக்கும் வகையிலும், பெண் தொழில் முனைவோருக்குச் சுயவேலை வாய்ப்பு அளிப்பதற்கும் கேளம்பாக்கம் அருகில் பெண் தொழில் முனைவோர்களுக்கென்று தனியாக உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்று உருவாக்கப்படும்.

### ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன்

109. ஆதிதிராவிடர்களுக்கு நல்ல தரமான கல்வியினை வழங்குவதுடன் பல்வேறு நலத் திட்டங்களில் பயன் பெறுவோர் எண்ணிக்கையையும் அதிகரிக்க ஆவன செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான ஒதுக்கீடு ரூ. 334 கோடி. இது வரும் ஆண்டில் ரூ. 434 கோடியாக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

110. நடப்பு ஆண்டில் கணினிக் கல்வி ரூ.180 இலட்சம் செலவில் 51 ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 உயர்நிலைப் பள்ளிகளிலும் தொடங்கப்பட்டுள்ளது. 2,000 மாணவர்கள் பயனடையும் வகையில் 40 மாணவரில்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

111. ஆதி திராவிடர் நலப்பள்ளிகளுக்கு, நிலையான கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்காக, நடப்பு ஆண்டில் ரூ.172 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட மாணவியர் இல்லங்களுக்கு கட்டிடங்கள் கட்ட ரூ. 8.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



112. கணிப்பொறி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து, சட்டப் பயிற்சி, பிளாஸ்டிக் போன்ற தொழில் சார்ந்த பயிற்சிகள் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

113. வரும் நிதியாண்டில் ரூ. 1.13 கோடி செலவில் 50 ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் மனையகத் தொடக்கப் பள்ளிகள், அடிப்படை வசதிகளுடன் நிலையுயர்த்தப்படும். மேலும் ஆறு நடுநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும், ஆறு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

114. **கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் அரசு வழங்கும் உணவுக் கட்டணம், மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.250 விருந்து 1-10-1997 முதல் ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டது. இனி அத்தொகை ரூ. 400 ஆக உயர்த்தப்படும்.** (மேசையைத் தட்டும் ஒலி).

115. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு நியமனங்கள் செய்யப்படாத பணியிடங்கள் 662 இருப்பதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டு, இதுவரை இவற்றுள் 54 பணியிடங்களுக்கு நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட உயர்மட்டக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு மொத்தம் உள்ள 110 துறைகளில் 80 துறைகளுக்கான ஆய்வை செயலர்களுடனும் துறைத் தலைவர்களுடனும் செய்து முடித்துள்ளது. இட ஒதுக்கீடு விதியினை நல்ல முறையில் செயல்படுத்த இக்குழு உதவும்.

116. **ஆதி திராவிடர்களுக்கு தொழில் நடத்த சலுகை வட்டியில் கடன் வழங்கிட வங்கிக்கு நிகராக தாட்கோ மூலம் ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.** (மேசையைத் தட்டும் ஒலி).

117. அனைத்து ஆதிதிராவிடர்களுக்கும் தரமான வீடுகளைக் கட்டித் தருவதும், வீட்டு மனைகளை வழங்குவதும் அரசின் முக்கிய குறிக்கோளாகும். தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு ரூ. 68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தர மூன்றாண்டு திட்டத்தைச் செயல்படுத்த அரசு முனைந்துள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்**

118. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 64.32 கோடி ஒதுக்கப்பட்டது. இது வரும் ஆன்டில் ரூ.90 கோடியாக உயர்த்தப்படும்.

119. நடப்பாண்டில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 40 விடுதிகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 22 விடுதிகளும் தொடங்கப்பட்டுள்ளன. புதிய கட்டிடங்கள் 13 கட்டப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகள் 25 தொடங்கப்படும். மேலும் 7 பிற்படுத்தப்பட்ட மாணவரில்லங்களும், 8 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவரில்லங்களும் கட்டப்படவுள்ளன.

120. கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் அரசு வழங்கும் உணவுக் கட்டணம் மாணவர் ஒருவருக்கு மாதமொன்றிற்கு ரூ. 250-லிருந்து, 1-10-1997 முதல் ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டது. இனி அத்தொகை ரூ. 400 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கைக்குப் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 15,000 என்பதை ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இது ஏற்கெனவே ஆதி திராவிடர்களுக்கு இருக்கிறது.

121. பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கணினிப் பயிற்சி, கனரக வாகனம் ஓட்டுதல், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆகிய வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பாண்டில் கணினிப் பயிற்சியில் மாணவர்கள் எண்ணிக்கை 175-லிருந்து 1,000 ஆகவும், கனரக வாகனம் ஓட்டுநர் பயிற்சியில் மாணவர்கள் எண்ணிக்கை 250லிருந்து 2,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

**கைத்தறி நெசவாளர் நலன்**

122. கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள 60 வயதை அடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை





ரூ. 150 வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு நடப்பாண்டில் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 96,000 கைத்தறி நெசவாளர் 60 வயதடையும்போது பயனடைவார்கள்.

123. கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, மாநில அரசு, உற்பத்திக்குரிய பொருள்களை ஒதுக்கீடு செய்தல் சட்டத்தைச் (Reservation of Articles for Production Act, 1985) செயல்படுத்த அமலாக்கப் பிரிவு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், மதுரை ஆகிய இடங்களில் செயல்படும்.

124. கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் உருவாகியுள்ள பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து ஒரு மாத காலத்திற்குள், அரசாங்கத்திற்கு அறிக்கை தர குழு ஒன்று அமைக்கப்படும் என்று நான் 23 ஆம் தேதி பேரவையிலே அறிவித்ததற்கு இணங்க, கைத்தறித் துறையின் அரசுச் செயலாளர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்படுகின்றது. அந்தக் குழுவில் ஈரோடு திரு. ஜெ. சுத்தானந்தன், ஆற்காடு திரு. பி. என். சுப்பிரமணி, எம்.எல்.ஏ., பள்ளிப்பட்டு டாக்டர் இ.எஸ்.எஸ். ராமன், எம்.எல்.ஏ., பெருந்துறை திரு. நா. பெரியசாமி, எம்.எல்.ஏ., திருவில்லிப்புத்தூர் திரு. இரா. தாமரைக்கனி, எம்.எல்.ஏ., வந்தவாசி, திரு. ச.சி. பெருமாள், நிதித் துறை கூடுதல் செயலர் ஆகியோர் இடம் பெறுவர். இந்தக் குழு மே முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கை தரும். அதன் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**தொழிலாளர் நலன்**

125. சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு அமைப்பு ரீதியில் இல்லாத, தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து அமைக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களின் பயன்கள் அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்குக் கிட்டுவதில்லை. எனவே, இவர்களுக்கு நோய்க்கால உதவிக் காப்பீடு, பேறுகால உதவித்தொகை மற்றும் ஓய்வூதியம் போன்ற நல உதவிகளை அளிக்கும் வகையில் நிர்வாகம், தொழிலாளர் மற்றும் அரசு பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாநில அளவிலான அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் நலவாரியம் ஒன்று

**அமைக்கப்பட்டு பல்வேறு தொழிலாளர் நல உதவித் திட்டங்கள் வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.** இதன்மூலம், சுமைதூக்கும் தொழிலாளர், தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலாளர், கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாத கைத்தறி தொழிலாளர், விசைத்தறி, செங்கல் தயாரிப்பு, சாயம் ஏற்றுதல், முந்திரி உடைத்தல், கயிறு தயாரித்தல், பந்தல் கட்டுதல், அப்பளம் தயாரித்தல், செயற்கை வைரம் தீட்டுதல் போன்ற தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பொற்கொல்லர், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், மட்பாண்டம் தயாரிப்போர், அச்சுத் தொழிலாளர், சமையல் மற்றும் ஹோட்டல் தொழிலாளர், தனியார் கடைகளில் பணிபுரிவோர், தையல் தொழிலாளர், சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகைக் கார் ஓட்டுநர்கள், உப்பளத் தொழிலாளர் போன்ற 43 அமைப்பு ரீதியில் இல்லாத தொழில்களில் பணிபுரியும், சுமார் 25 இலட்சம் தொழிலாளர்கள் பல்வேறு நல உதவிகளைப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

126. மூடிக் கிடக்கும் ஆலைகளின் தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் வகையில் பின்னி, டன்லப் போன்ற ஆலைகளின் நிருவாகங்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

**127. நலிந்த பிரிவினருக்காக இவ்வரசு பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற எல்லா பிரிவினருக்கும், வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம், மாதம் ஒன்றுக்கு ரூ. 100-லிருந்து வருமாண்டில் ரூ. 150 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக வருமாண்டில் ரூ. 150 கோடி ஒதுக்கப்படும்.**

128. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கும் இலங்கைத் தமிழர் அகதி முகாமிலிருப்பவர்களுக்கும் பொங்கல் திருநாளையொட்டி வழங்கப்படும் இலவச வேட்டி சேலைகளுக்காக ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



129. கொத்தடிமை ஒழிப்பு சார்பான விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலுள்ள கொத்தடிமைகளைக் கண்டறியப்படுவதற்கு உரிய வகையில் தன்னார்வு நிறுவனங்களின் உதவியுடன், ஜனவரி 1997 முதல் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, 25,008 கொத்தடிமைகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களின் மறுவாழ்விற்கென, மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ. 5 கோடி அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசின் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

## வீட்டு வசதி

130. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பாண்டில் 14,840 வீடுகள் கட்டி முடிக்கும். வருமாண்டில் ரூ. 252 கோடி மதிப்பீட்டில் மேலும் 15,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

131.உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்குத் தேவையான வீட்டுவசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில், இவ்வரசு ரூ. 13.7 கோடி மதிப்பீட்டில் 30 இல்லங்களைக் கட்டுவதென முடிவெடுத்துள்ளது.

132. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நடப்பாண்டில் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்காக 2,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கும். வருமாண்டில் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் 3,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், சென்னை மற்றும் இதர நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் 30,000 குடும்பங்களுக்கு, வருமாண்டில் ரூ. 6 கோடி செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். சென்னையில் ஆட்சேபகரமான பகுதிகளில் குடிசைகளில் வாழும் குடும்பங்களை சென்னைக்கு அருகில் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடியமர்த்தும் வகையில் 6,500 குடியிருப்புகள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி தொடக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

**133. நகரங்களில் குடிசைப் பகுதிகளில் அவ்வப்போது தீ விபத்துக்கள் நேர்ந்து, ஏழை மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் சேதம் ஏற்படுகிறது. எனவே, முதற்கட்டமாக, சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் ஓலைக் கீற்றுகள் வேய்ந்து அமைக்கப்பட்ட குடிசை வீடுகள் அடிக்கடி தீப்பிடிப்பதைத்**

தடுத்திடும் வகையில், ஏழை எளியோரின் ஓலைக் குடிசைக்கு மாற்றாக கல்நார் தகடு (Asbestos) கூரை வேய்ந்து தரும் பொறுப்பை அரசு ஏற்கும். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குரிய நிதி வரும் ஆண்டிலிருந்து ஒதுக்கப்படும்.

### சுதந்திரப் பொன் விழா ஆண்டு

134. சுதந்திரப் பொன்விழாவையொட்டி நான் அறிவித்தவாறு சாதிப் பிரிவினைகளற்ற. சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன், மாநிலம் முழுவதும் முதல் கட்டமாக 50 இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வருமாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 17.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

135. இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டான இந்த ஆண்டில் நமது மாநிலத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் இவ்வரசு, அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை ரூ. 1500-லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் மறைவுக்குப் பின்னர் அவர்களின் துணைவியர்க்கும் அல்லது சார்ந்திருப்பவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 என்ற வீதத்தில் உதவித்தொகை வழங்கப்படும். இது மொழிக் காவலர்களுக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டம் 15-8-1997 முதல் செயல்படுத்தப்படுகிறது.

136. இந்த சுதந்திரப் பொன்விழா ஆண்டில் சமூக நீதிக்காகத் தியாகம் செய்தவர்களை நினைவு கூர்ந்திடும் வகையில் 1987 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 20 சதவீத இட ஒதுக்கீடு கோரிப் போராடி, துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த இருபதுக்கு மேற்பட்டவர்களின் குடும்ப நிதியாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

137. சுதந்திரப் பொன்விழா ஆண்டில் தியாகிகளைப் போற்றும் வகையில், சென்னையிலுள்ள காந்தி மண்டபம் அருகில் தியாகிகள் மணி மண்டபம் கட்டும் பணிக்காக ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நினைவினைப் போற்றும் வகையில், சுதந்திரப் பொன்விழா ஆண்டு நினைவுச் சின்னம் சென்னை காமராசர் சாலை போர் நினைவுச் சின்னம் அருகே அமைக்கப்பட்டுள்ளது.



138. நாடகக் கலைஞர், தியாகி விஸ்வநாததாஸ் வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பிக்கவும், அதில் திருமண மண்டபம், நூல் நிலையம் ஆகியவற்றை நிறுவிடவும் அரசு ரூ.50 இலட்சம் அனுமதித்துள்ளது.

139. திருநெல்வேலி மாவட்டம், நெல்கட்டும்செவல் கிராமத்திலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவன் வாழ்ந்த மாளிகையினை பழமை மாறாமல் புதுப்பித்து நினைவுச் சின்னமாக்கவும், திருமண மண்டபம், பூங்கா போன்றவற்றினை அமைக்கவும் இந்த அரசு ரூ. 50 இலட்சம் வழங்கியுள்ளது.

140. தூத்துக்குடி மாவட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சியை அடுத்துள்ள கவர்னகிரியில் வாழ்ந்த விடுதலை வீரர் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு 200 வீடுகள் மற்றும் சாலை, பூங்கா, நூலகம், மின்சாரம் போன்ற வசதிகளை வழங்கும் 'வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம், கவர்னகிரி' என்ற திட்டத்தை ரூ. 1.05 கோடி செலவில் அரசு செயல்படுத்தியுள்ளது.

141. பொதுவுடைமை வீரர் ஜீவா நினைவைப் போற்றும் வகையில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சி.பி. இராமசாமி பூங்காவில் ரூ. 15.50 இலட்சம் செலவில் நினைவிடம் அமைப்பதற்கான பணிகள் முடிவுற்றுவிட்டன.

142. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நூற்றாண்டையொட்டி சென்னை காமராசர் சாலையில் ரூ.7.40 இலட்சம் செலவில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிலை அமைக்கப்பட்டு 15-12-97 அன்று திறந்து வைக்கப்பட்டது.

143. டாக்டர் அம்பேத்கார் மணி மண்டபம் அமைப்பது பற்றி நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஆராய்ந்து, அதற்கேற்ப விரைந்து முடிவெடுத்து, சென்னையில் அந்த மணி மண்டபம் அமைய உரிய பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

144. இடைக்காலத்தில் பாழடைந்த நிலைக்கு உள்ளான வள்ளுவர் கோட்டத்தைப் புதுப் பொலிவுடன் அமைத்து, மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.84.94 இலட்சம் நிதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## இந்து சமய அறநிலைய நிருவாகம்

145. திருக்கோயில்களில் நிருவாகத்தைச் சீரமைக்க முதலமைச்சர் தலைமையில் குழு ஒன்று அமைத்திருப்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவர். சமயச் சான்றோர்கள், தமிழ் அறிஞர்கள் கொண்ட இக்குழு ஆலயங்களின் நிருவாகத்தைச் சீரமைக்கவும், அவற்றின் சொத்துக்களைப் பாதுகாக்கவும், அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெருக்கவும், பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. திருக்கோயில்களின் சொத்துக்களை ஆக்கிரமிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கடந்த ஆண்டு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து 316 கிரவுண்டு மனை நிலங்களும், 257.56 ஏக்கர் மனை நிலங்களும் 1,355.07 ஏக்கர் விளை நிலங்களும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் ஒட்டுமொத்த மதிப்பு ரூ. 125.43 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

## மதுரையில் உயர்நீதி மன்றக் கிளை

146. மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையினை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. உயர்நீதி மன்றத்தைக் கலந்து ஆலோசித்து இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

## அரசுப் பணியாளர் நலன்

147. அரசு அலுவலர்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசுதான் மத்திய அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய விகிதங்களை முதல் முறையாக மாநில அரசு அலுவலர்களுக்கு 1989-ஆம் ஆண்டில் வழங்கியது என்பதை அறிவீர்கள். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு தனது அலுவலர்களுக்கு மாற்றியமைத்த ஊதிய விகிதங்களை காவல் துறையினர், ஆசிரியர்கள் உள்ளிட்ட மாநில அரசு அலுவலர்களுக்கும் அளிப்பது குறித்து அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. நான் அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களுடன் தனித்தனியாகவும், ஒன்றாகவும் கலந்தாலோசித்தேன். அவர்களின் கோரிக்கைகளையும் மாநில அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.



148. தற்பொழுதுள்ள 25 ஊதிய விகிதங்களுக்கு இணையாக மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்கப்படும். மத்திய அரசால் வழங்கப்பட்ட 40 விழுக்காடு ஊதிய நிர்ணயப் பயன் மாநில அரசின் முழுநேர அலுவலர்கள், பகுதி நேர அலுவலர்கள் அனைவருக்கும் வழங்கப்படும். திருத்திய ஊதிய விகிதங்கள் மத்திய அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட அதே தேதியிலிருந்து அதாவது 1-1-1996-லிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

149. மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அதே வீதத்தில் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

150. வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தமட்டில், மத்திய அரசின் திட்டத்தைவிட மாநில அரசின் திட்டத்தில் அதிகமான அலுவலர்கள் பயன் பெறுகிறார்கள். மத்திய அரசின் திட்டத்தின்படி நகரங்களின் எல்லைக்குள் பணியாற்றும் அலுவலர்களுக்கு மட்டுமே நகரங்களிற்குண்டான வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறது. ஆனால், மாநில அரசின் திட்டத்தின்படி நகரங்களுக்குள் மற்றும் நகரங்களைச் சூழ்ந்த பகுதிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் நகரங்களிற்குண்டான வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது. மேலும், தற்போது மாநில அரசின் வீட்டு வாடகைப்படி விகிதங்கள் மத்திய அரசின் வீட்டு வாடகைப்படி விகிதங்களின் அடிப்படையில் இல்லை. ஆயினும், அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, தற்பொழுது வழங்கப்படும் வீட்டு வாடகைப்படி இரட்டிப்பாக்கி வழங்கப்படும். இப்படிகள் உயர்ந்த வீதங்களில் 1-4-1998 முதல் வழங்கப்படும்.

151. நகர ஈட்டுப்படி வழங்குவதற்காக சென்னை மாநகரத்தை ஏ-1 வகை நகரம் எனவும், வீட்டு வாடகைப்படி வழங்குவதற்காக "ஏ" வகை நகரம் எனவும் மத்திய அரசு வகைப்படுத்தியுள்ளது. நம் நாட்டின் நான்கு பெருநகரங்களுள் ஒன்றாகச் சென்னை மாநகரம் கருதப்படுவதால், சென்னை மாநகரத்தை "ஏ-1"வகை நகரமாக வகைப்படுத்துமாறு மத்திய அரசினைக் கேட்டுக் கொள்கிறோம்.

152. மாநில அரசு ஓய்வூதியர்களுக்கு மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, மத்திய அரசின் ஓய்வூதியர்களுக்கு மற்றும்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

குடும்ப ஓய்வூதியர்களுக்கு அளிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் 1-1-1996 முதல் வழங்கப்படும். தற்பொழுது அவர்கள் பெறும் ஓய்வூதியத்தில் 40 விழுக்காடு உயர்வு வழங்கப்படும். குறைந்தபட்ச ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.1,275 வழங்கப்படும். ஓய்வு பெறும் அலுவலர்களுக்கு பணிக்கொடை கணக்கிடும் முறை, ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை ஒட்டு மொத்தத் தொகையாக பெறும் முறை ஆகியன மத்திய அரசில் உள்ளது போல் மாற்றி வழங்கப்படும். ஓய்வூதியர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் அளிக்க வேண்டிய நிலுவைத் தொகையில் 60 விழுக்காடு பிடித்து வைக்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியோடு திருப்பி அளிக்கப்படும். மீதமுள்ள 40 விழுக்காடு இரண்டு தவணைகளில் ரொக்கமாக வழங்கப்படும்.

153. இந்த முடிவுகளால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,230 கோடி கூடுதல் செலவாகும். அளிக்க வேண்டிய நிலுவைத் தொகை சுமார் ரூ. 2,400 கோடியாகும். ஏற்கெனவே அரசு அலுவலர்களுக்கு ரூ. 4,000-மும், ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.1,000-மும் தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 500-ம் இடைக்கால நிலுவைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இது இவர்களுக்கு அளிக்கப்படும் நிலுவைத் தொகையில் சரிக்கட்டப்படும். வரும் ஆண்டு செலவுடன் நிலுவைத் தொகையையும் வழங்குவது பெரும் நிதிச் சுமையை உருவாக்கும் என்பதாலும், அரசின் தற்போதைய நிதி நிலைமையில் இதனை ஏற்கும் நிலையில் அரசு இல்லை என்பதாலும், நிலுவைத் தொகையில் 60 விழுக்காடு அலுவலர்களின் சேம நல நிதியில் சேர்க்கப்படும் என்றும் மீதமுள்ள நிலுவைத் தொகை இரண்டு தவணைகளில் ரொக்கமாக வழங்கப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. சேம நல நிதியில் சேர்க்கப்பட்ட தொகை 5 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியோடு சேர்த்து கொடுக்கப்படும்.

154. இந்த முடிவுகள் உள்ளாட்சி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும்.

155. மத்திய அரசு அலுவலர்களுக்கு அளித்த திருத்திய ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்களுக்கும் அளிக்கும் முதலாவது தென்னிந்திய மாநில அரசு தமிழக அரசுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

156. இந்த ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்துவதில் முரண்பாடுகள் இருப்பின் அவற்றை பரிசீலித்து மூன்று மாதங்களுக்குள் அரசுக்கு பரிந்துரை அளிக்க ஒரு நபர் கமிஷன் அமைக்கப்படும்.

157. சுதந்திரப் பொன்விழா ஆண்டு நினைவாக சிறப்பு நேர்வுகளிலும், அபாயகரமான நேர்வுகளிலும் தியாக மனப்பான்மையோடும், கடமையுணர்வோடும் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து திறமை காட்டி செயல்படுகின்ற காவலர்களாயினும் அரசு அலுவலர்களாயினும் அவர்களுடைய செயலையும் நிகழ்வையும் பொறுத்து அவ்வப்போது அரசு விருது, பதவி உயர்வு, பொற்கிழி போன்றவைகளை வழங்கும் இத்திட்டம் வரும் ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்

158. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட ஒதுக்கீட்டளவை எய்தியுள்ள சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மத்தியத் திட்டக் குழு, ஒன்பதாவது திட்டத்திற்காக ரூ. 25,000 கோடி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளித்துள்ளது. நடப்பாண்டிற்கான மத்தியத் திட்டக் குழு ஒப்புதலளித்த ஒதுக்கீடு ரூ. 4,009 கோடியாகும். வரும் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 4,500 கோடியாக மாநிலத் திட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. மத்திய திட்டக்குழுவுடன் கலந்துரையாடிய பின் இது குறித்து முடிவு செய்யப்படும். அதை எதிர்நோக்கி, ரூ. 4,500 கோடி திட்ட ஒதுக்கீட்டளவின் அடிப்படையில் நாம் வரும் ஆண்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவோம்.

## நிதி நிலைமை

159. 1997-98ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை 1997 மார்ச் திங்களில் அவையில் வைத்தபோது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 12,641.05 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 14,377.62 கோடியாகவும் இருந்தது. இதனால், வருவாய் பற்றாக்குறை ரூ. 1,736.57 கோடியாகும். 1997-98 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 13,418.40 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.14,893.59 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 1,475.19 கோடியாகக் குறைந்துள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

160. 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தப் பற்றாக்குறை ரூ.498.38 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. ஆனால் 1997-98 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் அப்பற்றாக்குறை ரூ. 3.31 கோடியாகக் குறைந்துள்ளது.

161. 1998-99 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.15.,039.46 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18,048.04 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. 3008.58 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசுப் பணியாளர்களின் சம்பள உயர்விற்காகவும், உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகவும், ஓய்வூதியத் தொகை கொடுக்கும் வகையிலும் கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளதே இவ்வுயர்விற்கு முக்கிய காரணங்களாகும்.

162. 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் அனைத்துக் கணக்குகளிலும் நிகரப் பற்றாக்குறை, ரூ. 876.67 கோடியாக அதிகரித்துள்ளது.

163. வருவாய்க் கணக்கில் உள்ள பற்றாக்குறையைக் குறைக்க, தக்க வரி விதிப்பு மற்றும் செலவுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**மோட்டார் வாகன வரி**

164. ஒப்பந்தப் பேருந்துகள் (Omni bus) மீதான வரி ஒரு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ.1,500-லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்படுகிறது.

165. ஆண்டுதோறும் மோட்டார் வாகனங்களுக்கான வரி செலுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்க்க இரண்டு சக்கர வாகனங்களுக்கு ஏற்கெனவே ஆயுட்கால வரி முறை அறிமுகப்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அது போலவே நான்கு சக்கர மோட்டார் வாகனங்களுக்கும் இம்முறையை அறிமுகப்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக வாங்கப்படும் இத்தகைய வாகனங்கள் (Light motor vehicles) ஆயுட்கால வரி கட்டாயமாகச் செலுத்த வேண்டும். ஏற்கெனவே



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

இத்தகைய வாகனங்கள் வைத்திருப்பவர்கள் விரும்பினால் ஆண்டு வரிக்குப் பதிலாக ஆயுட்கால வரி செலுத்தலாம். இதற்கான சட்டத் திருத்தம் அறிமுகப்படுத்தப்படும்.

**வணிக வரிகள்**

166. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கு இவ்வரசு வரி விதிப்பில் சலுகை அளித்து வருவதை அறிவீர்கள். ஏழை எளியவர்கள், நடுத்தரப் பிரிவினர்கள் பயன்படுத்தும் பொருட்களின் மீதான வரிச்சுமையைக் குறைப்பது இவ்வரசின் கொள்கையாகும்.

அதற்கேற்ப,

- **தேங்காய் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி).
- **பேக்கரிகளில் தயாரிக்கப்படும் "வணிக சின்னம்" இல்லாத உணவுப்பொருட்களின் மீதான வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி).
- **குடும்பங்களில் சமையலுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் "வணிக சின்னம்" இல்லாத மசாலாப் பொடிகளுக்கான வரி, 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி).
- **முத்திரை சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகவும் வரி குறைக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி).
- **"வணிக சின்னம்" இடப்பட்ட ஐஸ்கிரீமிற்கான வரி 16 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி).
- **அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிப்பதை ஊக்குவிக்க, எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசி தவிட்டிற்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது.** (மேசையைத் தட்டும் ஒலி).

* பட்டாணி மாவு, தோலி, குருணை போன்றவற்றிற்குத் தற்போதுள்ள 11 சதவிகித வரியைக் குறைத்து ஏனைய இனங்களைப்போன்று 4 சதவிகிதமாக வரி நிர்ணயிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

* சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

* இந்த அரசு மீண்டும் கண்ணொளி திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்துள்ள இந்த நேரத்தில் விழியினிடையே பொருத்தப்படும் ஆழிக்கு (intra ocular lens) வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

* மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் காசினிக் கீரைக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

* வீடுகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் சிமெண்டினால் தயாரிக்கப்பட்ட உள்ளீடற்ற கற்கள் (hollow blocks) மீதான வரி 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுமானப் பொருட்களின் சிக்கனத்திற்கும், செலவைக் குறைப்பதற்கும் இது வழிவகுக்கும்.

* தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழகம் விரைவாக முன்னேறி வருகிறது. கணினி மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் பல தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வந்துள்ள இந்த நேரத்தில் கணினி மென்பொருளுக்கு முழு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

* இயற்கை ரப்பரை பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அப்பொருளின் மீதான கொள்முதல் வரிக்கு, விற்பனை வரிச் சட்ட பிரிவு 3(3) சலுகை அளிக்கக் கோரியுள்ளனர். வணிகர்களாக அல்லாத தோட்டப் பயிர் சாகுபடியாளர்கள் விற்பதால் இச்சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கு நிவாரணம்



அளிக்கும் வகையில் சலுகைவரி விகிதமான 3 சதவிகிதத்திற்கு மேல் கூடுதலாகச் செலுத்தும் வரியை தொழிற்சாலைகள் கட்ட வேண்டிய இறுதி விற்பனைப் பொருள் மீதான வரியிலிருந்து குறைத்துக் கொள்ளும் முறை வகுக்கப்படும். விற்பனை வரிச் சட்ட 3(3) பிரிவின் நிபந்தனைகள் இதற்குப் பொருந்தும்.

மாணவர்களால் பயன்படுத்தப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு சென்ற ஆண்டு உள்மாநில விற்பனைக்கு அளித்த சலுகையினால் ஏற்கெனவே இருந்த வெளிமாநில விற்பனைச் சலுகை தடைப்பட்டுள்ளது என முறையீடுகள் வரப்பெற்றுள்ளன. தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்திலிருந்து தயாரிக்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு மாநிலங்கள் இடையேயான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

சென்ற இரு ஆண்டுகளில் வரி விதிப்பு முறைகளில் பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. நாணயமாக வரி செலுத்துவோருக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரிவிதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்துள்ளது. இதன் ஒரு தொடர் நடவடிக்கையாக ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூ. 20 இலட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனை செய்யும் வியாபாரிகள் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (Chartered Accountant) தணிக்கை செய்ததன் அடிப்படையில் வரிக் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும். இதில் 10 சதவிகிதம் கணக்குகள் மட்டும் துறையினால் ஆய்வு செய்யப்படும். மேலும் வணிகராகப் பதிவு செய்ய தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு ரூ. 75,000-த்திலிருந்து ரூ.1,50,000 மாக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாற்றங்களினால் 19,000-த்திற்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

167. வரவு-செலவுத் திட்டத்திலுள்ள பற்றாக்குறையைக் குறைக்க சில வரி உயர்வுகள் மேற்கொள்வது தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. இருப்பினும், இவ்வாறு செய்யப்படும் மாற்றங்களின்போது மக்களின் நலனும், வரிச்சுமையும் அரசின் கவனத்தை விட்டு

அகலாது இருந்து வருகிறது. இக்கொள்கையின் அடிப்படையில் இவ்வாண்டு சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

168. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மீதான விற்பனை வரி 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகவும், வெளிநாட்டில் தயாரிக்கப்படும் மதுவகை மீதான விற்பனை வரி 60 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதமாகவும் உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

169. பான் மசாலா மீதான வரி 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

170. வாகனங்கள் மீதான தனிநபர்களுக்கான நுழைவு வரி வணிகர்களுக்கான நுழைவு வரியைவிடக் குறைவாக இருப்பதால் தற்போதும் வெளிமாநிலங்களில் வாகனங்களை வாங்குவது தொடர்கிறது. எனவே, தனிநபர்களுக்கான நுழைவு வரியை வணிகர்களுக்கான நுழைவு வரிக்கு ஈடாக உயர்த்தப்படுகிறது.

171. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கூடுதல் விற்பனை வரியில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. வரிக்குறைப்பை ஈடு செய்ய அடிப்படை வரி விகிதங்களில் செய்த மாற்றங்கள் போதிய அளவாக அமையவில்லை. இதைக் கருத்தில் கொண்டு, கூடுதல் விற்பனை வரி செலுத்த வேண்டிய தமிழகத்தில் தலைமையிடம் கொண்ட நிறுவனங்களுக்கு பின் வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன:

> ரூ.25 கோடிக்கு மேலும் ரூ.50 கோடிக்கு மிகாமலும் வரிக்குட்பட்ட விற்பனைத் தொகை உள்ள நிறுவனங்களுக்கு 1.5 சதவிகிதமும், ரூ. 50 கோடிக்கு மேலும், ரூ. 100 கோடிக்கு மிகாமலும் வரிக்குட்பட்ட விற்பனைத் தொகை உள்ள நிறுவனங்களுக்கு 2 சதவிகிதமும் கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படும். ரூ. 25 கோடி வரை வரிக்குட்பட்ட விற்பனைத் தொகையுள்ள நிறுவனங்களுக்கு கூடுதல் விற்பனை வரி கிடையாது.

172. வரி ஏய்ப்பினைக் குறைக்கவும் நமது மாநிலத்திற்குள் விற்பனையைப் பெருக்கவும் சென்ற ஆண்டு சில மாறுதல்களை





மேற்கொண்டோம். இவற்றினால் ஏற்படும் வருவாயை ஆய்வு செய்யும் பொழுது எதிர்பார்த்த கூடுதல் வரிவசூல் கிடைக்கவில்லை என்றால் முடிவுகளில் தக்க மாற்றம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைகளுக்கும் (man made fibre and yarn) விற்பனை வரி 8 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. எதிர்பார்த்ததற்கு மாறாக வரிவசூல் குறைந்துவிட்ட காரணத்தினால் விற்பனை வரி மீண்டும் 8 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது.

173. புதிதாக உருவாக்கப்பட்டுவரும் கேளிக்கைப் பூங்காக்கள் கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, பூங்காவுக்குச் செல்வோர்களிடம் வசூலிக்கப்படும் தொகையில் 20 சதவிகிதம் கேளிக்கை வரியாக விதிக்கப்படும். இப்பூங்காக்கள் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த வருவாயில் 90 சதவிகிதம் அளிக்கப்படும்.

## கூடுதல் நிதி ஆதாரங்கள்

174. மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்கு, அதிக அளவில் நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. இவற்றுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. அரசுக்கு வரவு-செலவுத் திட்டம் சாரா நிதி ஆதாரங்கள் திரட்டுவது குறித்து ஆலோசனை வழங்க மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் திரு. எஸ். வெங்கிடரமணன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது.

175. சிறுசேமிப்புத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதன் மூலம் இன்னும் கூடுதலாக நிதி ஆதாரங்களைத் திரட்ட இயலும் என்று இக்குழு பரிந்துரைத்துள்ளது. இத்திட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளை ஆர்வமுடன் ஈடுபடச் செய்து, சிறுசேமிப்பு கூடுதல் நிகர வசூல் தொகையின் அடிப்படையில் அரசுக்கு கடனாகக் கிடைக்கும் கூடுதல் நிதி ஆதாரங்களில் ஒரு பகுதியை உள்ளாட்சிகளுக்கும் ஊக்குவிப்புத் தொகையாக தத்தம் பகுதிகளில் செயல்படுத்த விரும்பும் அடிப்படை வசதித்திட்டங்களில் மூலதனச் செலவை மேற்கொள்ளும் வகையில் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

176. இக்குழு பரிந்துரைத்துள்ளபடி, அரசு நிறுவனங்கள் அடிப்படை வசதித் திட்டங்களில் முதலீடு செய்வதற்காக மூலதனச்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

சந்தையில், வரும் ஆண்டிலிருந்து கடன் பத்திரங்கள் வெளியிட்டு நிதி திரட்டும். குழுவின் மற்ற பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

177. மேற்கூறிய வரிவிதிப்புகள் மூலம் எதிர்பார்க்கப்படும் ரூ. 340 கோடி கூடுதல் வருவாயைக் கணக்கில் கொண்ட பின்பு, வரவு-செலவுத் திட்ட இறுதிப் பற்றாக்குறை ரூ.536.67 கோடியாக இருக்கும் நிலுவை வரிகளை முனைப்புடன் வசூலித்தல் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மூலம் இப்பற்றாக்குறை ஈடுகட்டக் கருதப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே,

178. இந்த நிதி நிலை அறிக்கையை அவையில் வைக்கும் இந்த நேரத்தில் இதனைத் தயாரிக்கும்போது என்னுடன் இணைந்து நின்று, கருத்தறிவித்து, ஓய்வு கொள்ளாது ஒத்துழைத்த அரசுத்துறை அலுவல் ஆர்வலர்களுக்கும், குறிப்பாகவும் சிறப்பாகவும் நிதித் துறைச் செயலாளர் திரு.பி.வி. ராஜாராமன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

179. ஒளிமயமானதும், உண்மையானதும், ஊழலற்றதுமான ஓர் உறுதிமிக்க ஆட்சிக்குரிய சிறப்புமிகு திட்டங்களைச் சிந்தித்துப் படைப்பது மட்டுமின்றி, அவற்றை செயலாற்றும் பணியில் முழுமையான வெற்றி பெற, நாட்டில் உள்ள நல்ல உள்ளங்களின் துணையையும், தூய வாழ்த்துக்களையும் வேண்டியவாறு, இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

180. சாதி மத பேதங்கள் எனும் ஈட்டி முனைகளால் தாக்கப்பட்டு இரத்தம் கசியும் இதயம் பெற்றவர்களாக காட்சியளிக்கும் நற்குணச் சான்றோரும் ஆன்றோரும் கண்ணீர் துடைத்து, களிப்பு சிந்தும் முகத்தினராய் விளங்கிடவும் அன்பும் அமைதியும் பண்பும் நிறைந்த சமுதாயமிது எனக் கம்பீரமாக நின்று புன்னகை புரிந்திடவும்-சமத்துவம்-சகோதரத்துவம்-மத நல்லிணக்கம்-மனித நேயம்-காத்திடுவோம் என்று சூளுரை மேற்கொண்டிடவும் அனைவரும் அணி வகுத்து நிற்போமேயானால், இந்திய ஜனநாயகத் தோட்டத்தில் மணம் வீசும் மலர்களாக நாம் விளங்கிடுவோம், தமிழ்நாட்டுக்கு வளம் சேர்க்கும் பேரருவியாகத்



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

திகழ்ந்திடுவோம், இந்தியத் திருநாட்டிற்கு வலிமை சேர்க்கும் மாநிலங்களில் ஒன்றாக இருந்திடுவோம் எனக் கூறி, இந்த அறிக்கையை அவையின் முன் படைக்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). வணக்கம்.

## 2. முன்பண மானியக் கோரிக்கைகள், 1998-99, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998-99-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ.வருவாய்க் கணக்கில் செலவு | |
| 1 நில வருவாய்த் துறை-- | 4,06,13 |
| 2 மாநில ஆயத் தீர்வைத் துறை-- | 4,25,47 |
| 3 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்--நிருவாகம்-- | 5,08,23 |
| 4 பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்-- | 25,21,52 |
| 5 முத்திரைத் தாள்கள்--நிருவாகம்-- | 1,62,24 |
| 6 ஆவணப் பதிவு-- | 10,28,93 |
| 7 மாநிலச் சட்ட மன்றம்-- | 2,36,19 |
| 8 தேர்தல்கள்-- | 7,33,03 |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்-- | 38,19,08 |
| 10 பால் வழங்கு செயல் திட்டங்கள்-- | 2,74,17 |
| 11 மாவட்ட நிருவாகம்-- | 1,14,70,01 |

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 27

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **அ.வருவாய்க் கணக்கில் செலவு**--தொடர்ச்சி | |
| 12 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்-- | 5,30,62 |
| 13 நீதி நிருவாகம்-- | 28,84,63 |
| 14 சிறைச்சாலைகள்-- | 12,94,19 |
| 15 காவல் துறை-- | 1,77,32,34 |
| 16 தீயணைப்புப் பணிகள்-- | 14,36,66 |
| 17 கல்வி-- | 9,00,26,93 |
| 18 மருத்துவம்-- | 1,60,93,43 |
| 19 மக்கள் நல்வாழ்வு-- | 1,00,49,63 |
| 20 வேளாண்மை-- | 1,84,75,05 |
| 21 மீனளம்-- | 10,67,59 |
| 22 கால்நடை வளர்ப்பு-- | 36,96,80 |
| 23 கூட்டுறவு-- | 13,47,93 |
| 24 தொழில்கள்-- | 3,94,59 |
| 25 கைத்தறியும் துணித் தொழிலும்-- | 43,48,53 |
| 26 கதர்-கிராமத் தொழில்கள்-- | 4,68,18 |
| 27 ஊரக வளர்ச்சி-- | 2,96,40,63 |
| 28 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 24,78,40 |
| 29 சமூக நலன்-- | 1,14,56,53 |
| 30 பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்-- | 76,13,69 |
| 31 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிர் மரபினர் நலன்-- | 22,36,16 |



1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **அ.வருவாய்க் கணக்கில் செலவு**--தொடர்ச்சி | |
| 32 வீட்டு வசதி-- | 11,79,30 |
| 33 நகர்ப்பகுதி வளர்ச்சி-- | 2,59,67 |
| 34 நுகர் பொருள் வழங்கல்-- | 2,91,56,97 |
| 35 பாசனம்-- | 1,38,92,16 |
| 36 பொதுப் பணிகள்--கட்டடங்கள்-- | 26,79,84 |
| 37 சுற்றுச் சூழல்-- | 2,61,51 |
| 38 சாலைகளும் பாலங்களும்-- | 1,52,09,90 |
| 39 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்-- | 4,50,72 |
| 40 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு-- | 17,50,52 |
| 41 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்-- | 4,87,95,79 |
| 42 பல்வகை-- | 3,12,89,75 |
| 43 எழுதுபொருள்--அச்சுத் துறை-- | 14,81,78 |
| 44 காட்டுவளத் துறை-- | 35,08,86 |
| 45 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்-- | 29,93,78 |
| 46 செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல்-- | 4,22,49 |
| 47 ஊரகத் தொழில்கள்-- | 26,12,20 |
| 48 குடிநீர் வழங்கல்-- | 51,89,37 |
| 49 நகராட்சி நிருவாகம்-- | 1,28,38,27 |
| 50 சுற்றுலா-- | 73,06 |
| 51 தமிழ் வளர்ச்சி--பண்பாடு-- | 6,15,84 |
| **மொத்தம்--அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **41,95,19,29** |

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 2

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு-- | |
| 52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு-- | 9,09,81 |
| 53 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு-- | 29,66 |
| 54 பாசனம் குறித்த மூலதனச் செலவு-- | 1,04,93,38 |
| 55 பொதுப் பணிகள்--கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு-- | 65,15,00 |
| 56 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு-- | 1,90,73,33 |
| 57 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு-- | 50,05,62 |
| 58 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு-- | 40,59,50 |
| 59 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு-- | 13,24 |
| 60 பல்வகை மூலதனச் செலவு-- | 84,52,99 |
| மொத்தம்--ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 5,45,52,53 |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக்கொடுத்தலும்-- | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்-- | 1,21,86,35 |
| பெருமொத்தம்-- | 48,62,58,17 |



1998 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 30-03-1998 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10.48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

ஏதுமில்லை.

—×—×—

D
Y 24, 3 1998
1998 • 4 1 1
தமிழ்நாடு அரசு ... காப்பக ... சென்னை-600 008
21683b